உ

சிவமயம்

# Nagarathar Association (Singapore)

## 15A, Tank Road, Singapore 238065

## UEN T02SS0070J

**மின் மடல்** - 2017-1

அன்புடையீர்,

வணக்கம்.

அவனருளாலே அவன் தாள் வணங்கி, உங்கள் அனைவரையும், இறைவன் புகழ்பாடும் தைப்பூச வேளையில் இந்த மாதாந்திர மின் மடல் வாயிலாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன.

**2016**ஆம் ஆண்டு நமது நகரத்தார் சங்கத்தினை வெகுச் சிறப்பாக நிர்வகித்து செயலாற்றிய திரு.விஸ்வநாதன் அண்ணன் அவர்களுக்கும் அவர்தம் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கும் முதற்கண் நமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த மாதாந்திர மின் மடல் வாயிலாக நமது சங்கத்தின் செய்திகளையும் நல்ல பல தகவல்களையும் உங்களோடு உடனுக்குடன் பகிர்ந்துகொள்வது நோக்கமாகும். காலாண்டு தோறும் நம் மலர் வழக்கம் போல வெளிவரும் என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துகொள்ள விரும்புகிறேன்.

**2017** நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பற்றிய விவரம் நமது சங்க இணைய தளத்தின் கீழ்கண்ட பக்கத்தில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்

http://www.singainagarathar.com/present_team.aspx

ஜனவரி மாதம் மட்டும் **20**க்கும் மேலான புதிய உறுப்பினர்கள் நமது சங்கத்தில் சேர்ந்து உள்ளனர். அவர்கள் அனைவரையும் நமது அனைவரின் சார்பாக வருக, வருக என்று வரவேற்கிறேன்.

இன்னும் நமது சங்கத்தில் உறுப்பினராக வேண்டிய நகரத்தார் நண்பர்கள் யாரேனும் இருந்தால் அவர்களை நமது சங்கத்தில் இணைய ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்களுடன் அதிக தொடர்பில் இருக்கவும், தகவல்களைப் பகிர்ந்துகொள்ளவும் வழிமுறைகளை ஆராய்ந்து வருகிறோம், கூடிய விரைவில் அவை பற்றி தெரிவிக்கிறேன்.

**உறுப்பினர் விவரக்கையேடு**

பலரின் வேண்டுகோளுக்கிணங்க இந்த வருடம் நமது புது விவரக்கையேட்டை (அட்ரஸ் புக்) வெளியிட இருக்கிறோம். நமது சிங்கப்பூரில் நகரத்தார் செய்யும் வியாபாரம் மற்றும் தொழில் விபரங்களையும் (Singapore Nagarathar Business Listing) சேர்த்து வெளியிட உள்ளோம்.

எதிர் வரும் தைப்பூசத்தில் மகமை எழுதும் இடத்தில் உங்களின் விவரங்களை சரிபார்க்கவும், தொழில் விபரங்களை பதிவு செய்யவும் படிவம் வைக்கப்பட உள்ளது. அதனை சரி பார்த்து / பூர்த்தி செய்து தரும்படி வேண்டிக்கொள்கிறேன்.

சிங்கப்பூரில் நமது சமூகம் பல்கிப்பெருகிவரும் இவ்வேளையில் ஒவ்வொருவரையும் தெரிந்துகொள்வதற்கு விவரக்கையேட்டில் புகைப்படம் இடம்பெறுவது இன்றியமையாதது ஆகிறது. ஆகையினால் நகரத்தார் பெருமக்கள் அனைவரும் தம்பதி சமேதராய் இருக்கும் புகைப்படம் தந்து இப்பணி சிறக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புகைப்படம் எடுக்க விரும்புவோரின் வசதிக்காக தைப்பூசத்தை அடுத்து வரும் 4 வார கடைசிகளில் மாலை நேரங்களில் (சனி மற்றும் ஞாயிறு) புகைப்படம் எடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**தொண்டூழியம்**

நமது இரண்டு ஆலயங்களிலும், சங்கத்திலும் பல பணிகள் இருப்பதால், நிறைய தொண்டூழியர்கள் தேவைப் படுகிறார்கள். எப்பொழுதும் போல் அனைவரும் குடும்பத்துடன் அனைத்து விழாக்களிலும், நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டும், தங்களால் முடிந்த உதவிகளைச் செய்தும், அனைத்து நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடக்க உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வருகிற சனிக்கிழமை 04.02.2017 தைக்கார்த்திகை அன்று அதிகாலை 6 மணியளவில் காய்கறி நறுக்குவதற்கும் மற்ற பல உதவிகளை செய்வதற்கும் நகரத்தார்கள் பெருமளவில் வந்து கலந்துகொண்டு அருள்மிகு தெண்டாயுதபாணியின் திருவருளை பெறவேண்டியது.

மின்னஞ்சல் வசதி இல்லாதவற்களுக்காகவும் நமது சமூக பெரியோர்களின் வசதிக்காகவும் இந்த மின்மடலின் நகல்கள் **(குறிப்பிட்ட அளவு மட்டும்)** நமது ஆலய அலுவலகத்தில் வைக்கப்படும், தேவைப்படுபவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லோரும் எல்லா நலமும், வளமும் பெற்று, சீரும், சிறப்புடன் வாழ வள்ளல் முருகன் தாள் பணிந்து வேண்டிக்கொள்கிறேன்.

வாழ்த்துக்கள், நன்றி. வணக்கம்.

லெ.சக்தி குமார்.
தலைவர், நகரத்தார் சங்கம் சிங்கப்பூர்.
31 ஜனவரி 2017.

## புதிய மின்னஞ்சல் முகவரிகள்

நமது சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர்களை எளிதாக தொடர்புகொள்ள கீழ்கண்ட புதிய மின்னஞ்சல் முகவரிகளை அறிமுகப் படுத்தியுள்ளோம்.

தலைவரைத் தொடர்புகொள்ள : president@singainagarathar.com

செயலாலரைத் தொடர்புகொள்ள : secretary@singainagarathar.com

பொருளாலரைத் தொடர்புகொள்ள : treasurer@singainagarathar.com

மலர் மற்றும் பொதுவாகத் தொடர்புகொள்ள : contact@singainagarathar.com

## நிறைவுற்ற நிகழ்ச்சிகள்

### தைப் பொங்கல்

நடக்கும் துர்முகி வருடம் தைத் திங்கள் முதல் நாள் பொங்கல் திருநாளை முன்னிட்டு நம் ஆலயத்தில் பொங்கல் காய்கறிகள் பெற பதிவு செய்திருந்த நகரத்தார்களுக்கு போகிப் பண்டிகை தினமான **13-01-2017** மார்கழித் திங்கள் **29** ம் நாளன்று மாலை ஆறு மணி அளவில் கரும்பு மஞ்சள் கொத்தோடு கூடிய காய்கறிப் பைகள் விநியோகிக்கப்பட்டன. கோவிலில் இருந்து மொத்தமாக சிறப்பாக தருவித்து கொடுக்கப்பட்ட காய்கறிகள் **400** பைகளாகப் பகிர்ந்தளிக்கப் பட்டது. இவ்வாண்டு கொடுக்கப்பட்ட காய்கறிகள் நல்ல முறையில் அமைத்திருக்கும் என்று நம்புகிறோம். வரும் ஆண்டுகளில் கூடுதலான எண்ணிக்கையில் நகரத்தார்கள் பொங்கல் காய்கறிகளுக்கு பதிந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

## எதிர்வரும் நிகழ்ச்சிகள்

### தைப்பூசம்

நம் முருகப் பெருமானின் தைப் பூச உற்சவம் வரும் தைத் திங்கள் **27**ம் நாள் வியாழக்கிழமை வருகிறது. நகரத்தார் பெருமக்கள் இவ்விழாவினில் வழக்கம் போல பெருந்திரளாக கலந்து கொண்டு வாரி வழங்கும் வள்ளல், எல்லாம் வல்ல அருள்மிகு தெண்டாயுதத்தானின் அருள் பெற வேண்டியது. இவ்வருடம் பூசம் வார நாளில் வருவதனால் எல்லாப் பணிகளையும் சிறப்பாக நிறைவேற்ற நம் எல்லோருடைய பங்களிப்பும் மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது. ஆலய அலுவலகத்தினை தொடர்பு கொண்டு உங்களால் இயன்ற பணிகளுக்கு பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

தைப்பூசத்தின் பொழுது கிட்டங்கியில் தங்கும் நகரத்தார் பெருமக்கள், கிட்டங்கியை சுத்தமாக வைத்திருக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். கிட்டங்கியில் உள்ள பெட்டி அடி தொழில் செய்யும் இடமாகவும், இறைவழிபாடு செய்யும் இடமாகவும் திகழ்வது நாம் அனைவரும் அறிந்ததே. ஆகையினால், அவ்விடத்தில் எந்தவொரு குப்பபையும் போடாமல், சுத்தமாக வைத்திருத்தல் நமது கடமையும், மரபுமாகும்.

**மகமை எழுதுதல்**
தைப் பூச தினத்தன்று ஆலயத்தின் இணைப்பு கட்டிட இரண்டாவது தளத்தின் முதல் அறையில் மகமை எழுதப்படும். அத்துடன் **வருடாந்திர சங்க உறுப்பினர் சந்தா** மற்றும் **செட்டியார் ஆலய குழும (CTS உறுப்பினர்)** சந்தாவினையும் நீங்கள் செலுத்தலாம். சிங்கப்பூருக்கு புதிதாகப் பணியாற்ற வந்திருக்கும் உங்கள் நகரத்தார் நண்பர்களையும் உறவுகளையும் நம் சங்க உறுப்பினர்களாக சேர ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். அன்றைய தினத்தில் புதிய உறுப்பினர் படிவங்களும் பெற்றுக் கொள்ளப்படும். நமது சங்க விவரக்கையேட்டிற்கான விபரங்கள் சரிபார்க்கவும் எற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேரம்: காலை 8.30 மணி முதல் மாலை 6.30 மணிவரை.

**மகமையின் சிறப்பு    நாம் ஏன் மகமை எழுதவேண்டும் ?**

மகமை எழுதுதல் என்பது நம் தொன்றுதொட்ட வழக்கமாகும். நம் நகரத்தார்கள் வழிவழியாகத் தங்கள் வருமானத்தின் ஒரு பங்கை தானதர்மத்திற்கும் அன்னதானத்திற்கும் ஆலயப் பணிகளுக்கும் செலவிட்டு வந்துள்ளனர். அந்த வழக்கப்படி நாம் ஒவ்வொருவரும் நம் வருமானத்தில் ஏதாவது ஒரு தொகையை இறைவனுக்குக் காணிக்கையாகச் செலுத்தி அவனருள் பெருவதற்கும் மேன்மேலும் தொழிலில் அபிவிருத்தி அடைவதற்கும் மகமை எழுதி வருகிறோம்.

மகன் + உரிமை என்ற இருசொற்களின் திரிந்த வடிவமே மகமை என்றாயிற்று என்பர். அதற்கு மகனுக்குரிய உரிமை என்று பொருள். அதாவது செட்டிமகனாம் முருகனுக்குரிய பங்கைச் செலுத்துவதாகும். அன்னவன் கோவிலுக்கு கொடுக்கக் கொடுக்க எல்லா செல்வங்களும் பல்கிப் பெருகும் என்பது நாமறிந்த உண்மை. ஆதலால் வருடா வருடம் முந்தைய வருடத்தில் செலுத்தியதை விட விருப்பத்திற்க்கேற்ப கூடுதலாய் எழுதுதலும் நம் மரபாகும். ஆகவே மகமை எழுதுவது நம் அனைவரின் முக்கியக் கடமை என்பதை மனதிற்கொண்டு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது அன்றைய தினம் மகமை எழுதும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**கட்டண விவரம்:**
மகமை: (விருப்பம் போல். குறைந்தது $11)
காவடிக்காணிக்கை: குடும்பம் ஒன்றுக்கு $1.50 வீதம்
இலைக் காணிக்கை: பெரியவருக்கு - $1.50 வீதம்; குழந்தைகளுக்கு - 50 காசுகள்.

**நகரத்தார் சங்க சந்தா விபரம்**
நடப்பு ஆண்டு சந்தா: $15 (வருடாந்திர உறுப்பினர்களுக்கு மட்டும்; முந்தைய வருட பற்று இருப்பினும் செலுத்தலாம்)
**நகரத்தார் சங்கம் புதிய உறுப்பினர்கள் சந்தா விபரம் :**
முதலாண்டு சந்தா $15 + பதிவுக் கட்டணம் $5 ஆக $20 (அல்லது)
ஆயுள் சந்தா : $200 + பதிவுக் கட்டணம் $5 ஆக $205.

**நன்றி.**